

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.9.2025) சென்னையில் நடைபெற்ற நினைவில் வாழும் கழக தலைமை நிலையச் செயலாளர் ஆ.த.சதாசிவம் அவர்களின் மகனும், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளருமான அழகிரி சதாசிவம் – பெனோ செஃபின் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முதுகலை பட்ட வகுப்பு பயிலும்

# 75 மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2000 கல்வி உதவித் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு! தமிழ்நாடு அரசாணை வெளியீடு!

**சென்னை, செப். 17 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை பட்ட வகுப்பு பயிலும் 75 மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2000/ வீதம் கல்வி உதவித் தொகை மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் 45 மாணவர்களுக்கு உணவு வழங்கிட மொத்தம் ரூ.26.10 இலட்சம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதலுடன் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள்,

“உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களில் தேர்வின் அடிப்படையில் 15 மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ. 2000/ வீதம் வழங்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். விடுதியில் தங்கிப்பயிலும் 45 மாணவர்களுக்கு 2025 2026 கல்வியாண்டு முதல் உணவு வழங்க ஏதுவாக ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். “

– என்னும் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பின்படி, முதலமைச்சர் அவர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை மாணவர்களுக்குத் தேர்வின் அடிப்படையில் முதல், இரண்டாம், மூன்றாம், நான்காம், மற்றும் ஐந்தாம் ஆண்டுகளில், பயிலும் மாணவர்களுள் ஆண்டுக்கு 15 மாணவர்கள் என 75 மாணவர்களுக்கு மாதம் ரூ.2000/ வீதம் 12 மாதங்களுக்கு ரூபாய் 18 இலட்சம், விடுதியில் தங்கிப்பயிலும் 45 மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு 1 மாதத்திற்கு ரூ.67,500 / வீதம் தொடர் செலவினமாக ஓராண்டுக்கு ரூபாய் 8 இலட்சத்து 10 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 26 இலட்சத்து 10 ஆயிரம் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள்.

இதற்குரிய அரசாணை 12.9.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டம், முதுகலை, மற்றும் தமிழ்ச் சுவடியியல் (ம) பதிப்பியல் ஓராண்டு பட்டய வகுப்பில் பயிலும் மாணவர்கள் தமிழ் உயர்கல்வி தொடர்ந்து பயில்வதில் தொய்வுநிலை ஏற்படாமலிருக்க, இம்மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவர்களுக்குத் மாதந்தோறும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருவதுபோல், இந்த ஆண்டு முதல் ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இவை மட்டுமின்றி நிறுவன விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு எந்தவொரு கட்டணமும் இல்லாமல் உணவு வசதி ஏற்படுத்தித் தருவது, தமிழ் உயர்கல்வி பயிலும் ஆர்வத்தை மாணவர்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அறிவிப்புகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டிருப்பது நிறுவன மாணவர்களிடம் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. கல்வி உதவித் தொகையும், விடுதி மாணவர்களுக்கு உணவும் வழங்கிட ஆணை பிறப்பி த்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

---

### தமிழ்நாடு வக்பு வாரியம் சார்பில்

# மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 17 -**

**தமிழ்நாடு வக்பு வாரியம் சார்பில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மற்றும் பயிலவுள்ள மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் பொருளாதார தடையினால் உயர்கல்வியினை தொடர இயலாத இஸ்லாமிய மாணவ மாணவியர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பினை தொடர கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, இஸ்லாமிய மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையினை வழங்கினார்.

இஸ்லாமிய பெருமக்களின் நல்வாழ்விற்காக தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் உலமாக்களுக்கு மாதம் ரூ.3,000/ ஓய்வூதியம், உலமா ஓய்வூதியதாரர் இறப்பின் அவரது வாரிசுதாருக்கு உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000/ மதிப்பூதியம் வழங்கப்படுவதோடு, 1 முதல் 8 –ஆம் வகுப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர்களுக்கு ஒரு மாணவிக்கு ரூ.1,000/ வீதம் கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்பு நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுது பார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டு (202526) தொன்மையான 10 வக்பு நிறுவ னங்களை பழுதுபார்த்து சீரமைக்க ரூ.10 கோடி மற்றும் பெரு மராமத்து மற்றும் பழுதுபார்ப்பு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்பு நிறுவனங்களில் ஏற்படும் சிறிய அளவிலான பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதியும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டில் போற்றத்தக்க திறமை இருந்தும் பொருளாதார தடையினால் உயர்கல்வியினை தொடர இயலாத இஸ்லாமியசிறுபான்மையின மாணவ – மாணவி யர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பினை தொடர ஏதுவாக தமிழ்நாடு வக்பு வாரியத்தின் சார்பில் 2000 மாணவ – மாணவியருக்கு தலா ரூ.10,000/ வீதம் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் தொடக்கமாக 10 மாணவ – மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபா ன்மையினர் நலத்துறை செயலாளர் எ.சரவணவேல்ராஜ், சிறுபான்மையினர் நல ஆணையர் திருமதி மு.ஆசியா மரியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரையாற்றுகிறார்!

# கரூர் கழக முப்பெரும் விழாவில் அலைகடலென திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அழைப்பு!

கரூர், செப். 17 –

கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றுகின்றார்கள். அலைகடலென அனைவரும் திரண்டு வருமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.



கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்று (செப்டம்பர் 17) மாலை 5 மணி அளவில் கரூர் மாவட்டம், கரூர் கோடங்கிபட்டி (திருச்சி பைபாஸ் ரோடு) கலைஞர் திடலில் தி.மு.க. முப்பெரும் விழா 2025 நடைபெற உள்ளது. கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை உரை ஆற்ற உள்ளார்கள். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, திருச்சி என்.சிவா, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் ப.செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இவ்விழாவில் பெரியார் விருது கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும், அண்ணா விருது தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினர், பாளையங்கோட்டை நகரமன்ற முன்னாள் தலைவர் சுப சீதாராமன் அவர்களுக்கும், கலைஞர் விருது நூற்றாண்டு கண்டவரும், அண்ணா நகர் பகுதி முன்னாள் செயலாளர், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது கழக மூத்த முன்னோடி தலைமைச் செயற்குழு உறுப்பினர் நினைவில் வாழும் குளித்தலை சிவராமன் அவரது குடும்பத்தாருக்கும். பேராசிரியர் விருது கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர். சட்டப்பேரவை முன்னாள் கொறடா மருதூர் ராமலிங்கம் அவர்களுக்கும் மு.க.ஸ்டாலின் விருது ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் முன்னாள் செயலாளர், முன்னாள் அமைச்சர், பொங்கலூர் பழனிச்சாமி அவர்களுக்கும், முரசொலி அறக்கட்டளை சார்பில் முரசொலி செல்வம் விருது மூத்த பத்திரிகையாளர் ஏ. எஸ். பன்னீர்செல்வன் அவர்களுக்கும் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை கழக விருதுகளாக தமிழ்நாட்டில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்ச்சான்று, பணமுடிப்பு ஆகியவற்றை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இவ்விழாவில் தலைமை கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். மாநில சார்பு அணி நிர்வாகிகள், கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயற்குழுபொதுக் குழு உறுப்பினர்கள், கழக மாவட்டத் திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் பங்கேற்கின்றனர்.

இதுசமயம், கரூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BDA, BLC பூத் இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் அலைகடலென திரள்வீர் என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு வி.செந்தில்பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.

